**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 72/2022**

**Deposition of witness for prosecution : PW - 7 (LW-9 )**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **கண்ணன்** | **Father's Name** | |
| **Village** | | **Taluk** | |
| **Caste** | | **Calling** | |
| **Religion** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 29.01.2025**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தாலுக்கா ஆணைக்குப்பம் கல்லடிமேடு கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 12.02.2019 ம் தேதி இரவு 8.00 மணியிருக்கும் நான் வேலைக்கு சென்று விட்டு வந்தேன். அப்போது எங்கள் ஊரைச்சேர்ந்த வேம்பு வீட்டில் அழுகை சத்தம் கேட்டது. நான் அங்கு போய் பார்த்தேன். அப்போது வேம்பு தனது மகன் சுதாகர் வேளாங்கண்ணி லாட்ஜில் இறந்து விட்டதாக தகவல் வந்ததாக சொல்லிவிட்டு அழுதார். நாங்கள் ஊர்க்காரர்கள் அனைவரும் வாகனத்தை எடுத்துக்கொண்டு வேளாங்கண்ணி காவல் நிலையம் சென்றோம். அதுபற்றி தகவல் எங்களுக்கு வரவில்லை என்று சொன்னார்கள். அதன் பின்னர் நாங்கள் அனைவரும் வேளாங்கண்ணி அருட்செல்வம் லாட்ஜிக்கு சென்றோம். அங்கு பணியிலிருந்தவர்கள் சுதாகர் மயக்கம் போட்டு கீழே விழுந்து விட்டதாக அவருடன் தங்கியிருந்த சத்யா என்ற பெண் சொன்னார் என்றும், அதன்பிறகு மருத்துவமனையில் பிரேதத்தை பார்க்க சென்றோம், அங்கு அவர்கள் காட்டவில்லை. அதன் பின்னர் வேளாங்கண்ணி காவல் நிலையம் சென்று நடந்த விவரத்தை தெரிவித்து விட்டு பின்னர் நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனைக்கு வந்தோம். அதன்பிறகு நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்து பி ரேதத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். சம்பவம் பற்றி காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள், நான் நடந்த விவரங்களை சொன்னேன்.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது நீதிமன்றத்தில் சொன்ன விவரங்களைத்தான் சொன்னேன். எனக்கு எந்த விவரங்களும் தெரியாது என்றும், போலீசார் என்னை விசாரிக்க வில்லை என்றும், அரசுதரப்பு கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல்முறையாக அரசு தரப்பிற்கு ஆதரவாக தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் என்று போலீசார் சொல்லிக் கொடுத்ததற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 72/2022**

**Deposition of witness for prosecution : PW - 6 (LW-6 )**

| | | | |
|---|---|---|---|
| **Name** | சுதா | **Father's Name** | |
| **Village** | | **Taluk** | |
| **Caste** | | **Calling** | |
| **Religion** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on**
**29.01.2025**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் மாவட்டம், பழையவலம் கிராமத்தில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 12.02.2019 ம் தேதி மாலை எனது அக்கா எனகது போன் செய்து எனது சகோதரர் சுதாகர் இறந்து விட்டதாக சொல்வதாக எனக்கு தகவல் சொன்னார். உடனே நானும், எனது கணவரும் எனது அம்மா வீடான கல்லடிமேட்டிற்கு சென்றோம். அங்கு எனது அம்மா தனக்கு வேளாங்கண்ணியிலிருந்து சுதாகர் இறந்து விட்டதாக தகவல் வந்ததாக சொன்னார். நாங்கள் ஊர் முக்கியஸ்தர்களோடு வேளாங்கண்ணி காவல் நிலையம் சென்றோம். அன்று இரவு எங்களிடம் பிரேதத்தை காட்டவில்லை, மறுநாள் தான் காட்ட முடியும் என்று மருத்துவமனையில் சொல்லி விட்டார்கள். நாங்கள் சம்பவம் பற்றி விசாரிக்க உடன் இருந்த சத்யா என்பவர் சுதாகர் மயக்கம் வந்து விழுந்து இறந்து விட்டார் என்று சொன்னதாக அவர்கள் சொன்னார்கள். அதன்பிறகு வேளாங்க்ணிண காவல் நிலையத்தார் பிரேதத்தை வாங்கி செல்லுங்கள் அதன்பிறகு நாங்கள் விசாரிக்கிறோம் என்று சொன்னார்கள். சம்பவம் பற்றி காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள், நான் நடந்த விவரங்களை சொன்னேன்.

**<u>எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்தபோது நீதிமன்றத்தில் சொன்ன விவரங்களைத்தான் சொன்னேன். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க போலீசார் விசாரிக்காத சங்கதிகளை முதல் முறையாக தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 72/2022**

**Deposition of witness for prosecution : PW - 5 (LW-5 )**

| **Name** | **வேம்பு** | **Father's Name** | |
|---|---|---|---|
| **Village** | | **Taluk** | |
| **Caste** | | **Calling** | |
| **Religion** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 29.01.2025**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தாலுக்கா ஆணைக்குப்பம் கல்லடிமேடு கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 12.02.2019 ம் தேதி ஒரு நாள் மாலை 7.00 மணியளவில் வேளாங்கண்ணி அருட்செல்வம் லாட்ஜில் இருந்து சிலம்பு என்பவர் எனக்கு கைபேசி மூலம் ஒரு நபர் பேசினார். அப்போது அவர் எனது மகன் சுதாகர் லாட்ஜில் இறந்து போய் விட்டார் என்றும், அவருடங் சத்யா என்ற பெண் தங்கியுள்ளார் என்றும், அந்த பெண்ணும், எனது மகனும் தங்கியிருந்த அறையிலிருந்து சத்யா என்ற பெண் ஒடியாருங்கள், ஒடியாருங்கள் என்று சத்தமிட்டார் என்றும், சத்தம் கேட்டு அந்த அறைக்கு லாட்ஜின் ஊழியர்கள் சென்று பார்த்ததாகவும் சொன்னார்கள் அவர்கள் போய் பார்த்தபோது எனது மகன் சுதாகர் தரையில் கிடந்தார் என்றும், என்ன என்று உடன் இருந்த சத்யாவை விசாரித்தோம் என்றும், அதற்கு அவர் எனது மகன் சுதாகருக்கு லோ பிரசர் ஏற்பட்டு மயங்கி விட்டதாக அவர் தன்னிடம் கூறியதாக என்னிடம் சொன்னார்கள். அதன் பிறகு தகவல் கேள்விபட்டு ஊர்க்காரர்கள் மற்றும் ஊர் முக்கியஸ்தர்களுடன் வேளாங்கண்ணி காவல் நிலையம் சென்றோம். அதன்பிறகு வேளாங்கண்ணி போலீசார் எனது மகனின் பிரேதத்தை மருத்துவமனையில் ஒப்படைத்திருப்பதாகவும், மறுநாள் நேரில் வாருங்கள் என்று சொன்னார்கள். அதன்பிறகு நாங்கள் எனது மகனின் சாவில் மர்மம் இருப்பதாக நான் வேளாங்கண்ணி காவல் நிலைய போலீசாரிடம் தெரிவித்தேன்.

அதன்பிறகு மேற்படி புகார் சம்மந்தமாக எங்கள் மகனை அடக்கம் செய்து விட்டு வாருங்கள் நாங்கள் முழுமையாக விசாரிக்கிறோம் என்று போலீசார் சொன்னார்கள். பின்னர் மறுநாள் நாங்கள் எங்கள் தெருவைச்சேர்ந்த அனைவரும் சேர்ந்து நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனையில் எனது மகனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை நடத்தினார்கள். நான் எனது மகனை அடையாளம் காட்டி விவரங்களை கூறினேன். போலீசார் குறித்துக்கொண்டார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை</u>**

நான் முதன்மை விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் முதன்முறையாக அரசு தரப்பு கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 72/2022**

**Deposition of witness for prosecution : PW - 4 (LW-4 )**

| | | | |
|---|---|---|---|
| **Name** | கலியபெருமாள் | **Father's Name** | |
| **Village** | | **Taluk** | |
| **Caste** | | **Calling** | |
| **Religion** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 29.01.2025**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தாலுக்கா ஆணைக்குப்பம் கல்லடிமேடு கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியாது. ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 12.02.2019 ம் தேதி மாலை 7.00 மணியளவில் வேளாங்கண்ணி அருட்செல்வம் லாட்ஜில் இருந்து எனது மனைவி வேம்புவிற்கு கைபேசி மூலம் ஒரு நபர் பேசினார். அப்போது எனது மகன் சுதாகர் லாட்ஜில் இறந்து போய் விட்டதாக தகவல் சொன்னதாக எனது மனைவி சொன்னார். அதன்பிறகு நான் எனது மனைவி, எனது மகள் மற்றும் ஊர்க்காரர்கள் வேளாங்கண்ணி அருட்செல்வம் லாட்ஜிக்கு சென்றோம். அதன் பின்னர் நாங்கள் போய் எப்படி இறந்தார் என்று விசாரித்தோம். அங்கு விசாரித்தபோது எங்கள் ஊரைச்சேர்ந்த சத்யா என்ற பெண் தங்கியிருந்த அறைக்கு எனது மகனை கூப்பிட்டதாகவும், அப்போது லாட்ஜில் வேலை பார்க்கின்றவர்கள் அந்த அறைக்கு சென்று பார்த்தோம் என்றும், அப்போது எனது மகன் சுதாகர் கீழே கிடந்தார் என்றும் அவர்கள் சொன்னார்கள். எனது மகன் எப்படி இறந்தார் என்று அவர்கள் சொல்லவில்லை. அப்போது எனது மகனின் பிரேதத்தை வேளாங்கண்ணி மாதா மருத்துவமனைக்கு கொண்டு சென்று விட்டதாக லாட்ஜ் மேலாளர் எங்களிடம் சொன்னார். பின்னர் நாங்கள் மறுநாள் மருத்துவமனை சென்று எனது மகனின் பிரேதத்தை பார்த்தோம். வேளாங்கண்ணி போலீசார் என்னை விசாரித்து அடையாளம் காட்ட சொன்னார்கள், நான் அடையாளம் காட்டினேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள், நான் நடந்த விவரங்களை சொன்னேன்.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரிக்கவே இல்லை, என்னை விசாரித்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**